# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.152/2018

வாதிகள் தரப்பு 4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்பசாமி வா.சா.4 | | |
| த/பெ. | முருகன் | | |
| கிராமம் | செம்பட்டி கிராமம் | தொழில் . | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது 40 | |

---

முதல் விசாரணை 08–06–2026.

நான் செம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியமளிக்க இன்று ஆஜராகியுள்ளேன். குறிஞ்சான்ளும் கிராமம், செம்பட்டி கிராமம் நிர்வாகத்திற்குட்பட்டது. அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களின் அசலையும், உண்மை நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

புல எண்.24 ற்கான தற்போதைய புல வரைபடம் உண்மை நகல் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புல எண்.24 ற்கான பழைய புல வரைபடம் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண்கள்.24/15 சி, 24/16 சி–ற்கான அ–பதிவேடு உண்மை நகல் (அ–பதிவேடு விபரப் பட்டியல் பக்கம் 32 முதல் 34 வரை) **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண்கள்.24/15 சி, 24/16 சி–ற்கான 10(1) சிட்டா உண்மை நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண்கள்.24/15 சி, 24/16 சி–ற்கான 10(1) அடங்கல் கணக்கு உண்மை நகல் **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) யு.டி.ஆர் கணக்குப்படி 24/15 சி முழுவதும் சர்க்கரை என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 24/16 சி முழுவதும் சர்க்கரை என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 24/15 சி இடத்திற்கு மேற்கே 24/16 சி உள்ளது என்றால் சரிதான். 24/16 சி இடத்திற்கு மேற்கே ரோடு உள்ளது என்றால் சரிதான். 24/15 சி, 24/16 சி இடத்திற்கு செல்வதற்கு அதற்கு மேற்கே உள்ள ரோட்டை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரிதான். 24/15 சி–ல் உட்பிரிவு செய்யப்பட்ட பகுதி போக மீதமுள்ள இடம் சர்க்கரை பெயரில் உள்ளது என்றால் சரிதான். 24/16 சிக்கு நேர் வடக்கே 24/16 பி உள்ளது என்றால் சரிதான். 24/16 பி சின்னராசு பெயரில் உள்ளது. 24/16 பிக்கும் வடக்கே ரோடு உள்ளது என்றால் சரிதான்.

2) தாவா சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். 24/16 பிக்கும் தெற்கே, 24/16 சி–க்கு வடக்கே ஒரு பாதை பூமியில் உள்ளது என்றால் சரிதான், வருவாய் ஆவணத்தில் இல்லை. 24/15 சி–ல் உட்பிரிவு செய்து வீடுகட்டியுள்ள நபர்கள் அனைவரும் அந்த பாதை வழியாகத்தான் செல்கிறார்கள் என்றால் சரிதான், அதை தவிர்த்து வேறு பாதை இல்லை என்றால் சரிதான். அந்த பாதையில் அரசாங்க குடிநீர் குழாய் பைப் செல்கிறது என்றால் சரிதான். இ.பி. போஸ்ட் இரண்டு உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S